# வன்முறையற்ற இலங்கைக்காக

## அவளுடன் நாம் இருக்கிறோம்

இலங்கையின் 5 மாவட்டங்களில் 3 இல் 1 க்கு மேற்பட்ட பெண்களின் கொலைகள் அவர்களின் துணைவர்களாலேயே ஏற்படுத்தப்படுகின்றன. வன்முறைகள் பெண்களை உடல் ரீதியாக, உளவியல் ரீதியாக மற்றும் பொருளாதார ரீதியாக பாதிப்பதோடு அவர்களுடைய ஆரோக்கியம், குடும்பம் மற்றும் சமூகத்திலும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியமானது (UNFPA), கனேடிய தூதரகம் மற்றும் மகளிர் மற்றும் சிறுவர் விவகார உலர் வலய அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து, வன்முறைக்காளாகும் பெண்கள் மற்றும் சிறுமியரிற்கான சேவைகளை வலுப்படுத்த பணியாற்றுகின்றது. ”நாங்கள் அவளுடன் இருக்கிறோம்” என்ற இரண்டரை வருட செயற்றிட்டமானது பெண்கள் மற்றும் யுவதிகளுக்கெதிரான வன்முறையை ஒழிக்கும் முக்கியமான பங்காளர்களாக அரசாங்க அலுவலர்களை முன்வைக்கும் நோக்கில் அமுல்படுத்தப்படும்.

தாதியர், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், தீர்மானம் எடுப்பவர்கள், உளவளத்துணையாளர்கள், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் சட்ட உதவி அதிகாரிகள் அனைவரும் பெண்கள் மற்றும் சிறுமிகள் வன்முறையைத் தடுப்பதற்கான மற்றும் அதன் விளைவுகளில் இருந்து மீள்வதற்கான ஆதரவினை பெறுவதனை உறுதி செய்வதன் மூலம் அவர்கள் பெண்கள் மற்றும் சிறுமிகளுடன் இருப்பதனை உறுதி செய்வதற்கு,

வன்முறையற்ற இலங்கைக்காக,
அவளுடன் நாம்
இருக்கிறோம்

**வன்முறையின் பல்வேறு வடிவங்கள்**

- உடல்சார் வன்முறை
- பாலியல் வன்முறை
- உணர்வுசார் துஷ்பிரயோகம்
- பொருளாதார வன்முறை
- ஆட்கடத்தல்
- பாலியல் பலாத்காரம்
- சிறுவர் திருமணம்
- இணைய மூலமான துன்புறுத்தல்

WE ARE WITH HER
අප ඇය සමඟ | அவளுடன் நாம்
FOR A VIOLENCE FREE SRI LANKA

வன்முறையிலிருந்து மீண்டவர்கள் உதவிகோரும் போது அவர்கள் ஆதரவற்றவர்களாகவோ அல்லது தனிமைப்பட்டதாகவோ உணராதபடிக்கு பெண்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பில் பொதுத்துறை அதிகாரிகளுக்கு விழிப்புணர்வூட்டி பயிற்சியளிக்கிறோம்.

பெண்கள் மற்றும் சிறுமியர் பொருத்தமான, அர்ப்பணிக்கப்பட்ட சேவைகளை ஒவ்வொரு படிநிலையிலும் பெறுவதனை உறுதி செய்வதற்கு, சுகாதார, சமூக மற்றும் பொலிஸ் மற்றும் நீதித் துறைகளில் தரமான, இணைப்புகளுக்கு இடையிலான மறுசீரமைப்பு சேவைகளை நாம் பரீட்சிக்கிறோம்.

தமது வாழ்நாள் முழுவதிலும் பெண்கள் மற்றும் சிறுமியர் பாதுகாப்பாக இருப்பதனை உறுதி செய்வதற்கு ஆதாரம் சார் கொள்கைகளை முன்னெடுப்பதற்கு, பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான வன்முறைக்கான பரந்தளவு விடயம் தொடர்பான தரவினை நாம் சேகரிக்கின்றோம்.



9 ஜனவரி 2018

மார்ச் 2020 அளவில், பொது நிறுவனங்களின் ஊடாக பாலியல் மற்றும் பால்நிலை சார் வன்முறையை அடையாளப்படுத்துவதற்கு செயற்றிட்டத்தை வழங்குவதற்கான 900,000 கனடிய டொலர்களுக்கான உதவித்தொகை ஒப்பந்த கடிதத்தில் கையெழுத்திட்டது.



5 ஜுலை 2018

சுகாதாரம், சமூகம் மற்றும் பொலிஸ் மற்றும் நீதித் துறைகளில் சேவைகளுக்கு இடையிலான தொடர்புகளுக்கான இலங்கையில் உலகளாவிய வழிகாட்டல் கருவி அறிமுகம். துறைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு வன்முறையை எதிர்கொண்ட பெண்கள் மற்றும் சிறுமியர்களின் பல்வேறு தேவைகளுக்கான பிரதிபலிப்பை மேம்படுத்துகின்றது.



5 – 6 ஜுலை

வன்முறைக்கு ஆளான பெண்கள் மற்றும் சிறுமியர்களுக்கு பதிலளித்த ஒருங்கிணைப்பு மற்றும் தரக்கட்டுப்பாட்டு தொடர்பான இரண்டு நாள் செயலமர்வு, அரசாங்க அமைச்சுக்கள், மற்றும் திணைக்களங்கள், முன்னணி சேவை வழங்குனர்கள், ஐ.நா நிறுவனங்கள், சிவில் சமூக நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் முன்னெடுக்கப்பட்டது.



ஆகஸ்ட் - ஒக்டோபர்

மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் பங்காளித்துவத்தில், மனித உரிமைகள் ஆணைக்குழு, சட்ட உதவி ஆணைக்குழு, மற்றும் பொது சேவைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு அம்பாறை, அனுராதபுரம், வவுனியா மற்றும் கொழும்பில் பல்வேறு செயலமர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. ஆதரவு நாடும் போது பாரபட்சத்தை எதிர்கொள்ளும் வன்முறையின் பாதிக்கப்பட்டவர்களை தடுப்பதற்கு ஆதிகாரிகள் எடுக்கக் கூடிய நடைமுறைச் செயற்பாடுகள் குறித்து செயலமர்வு கவனம் செலுத்தியது.



பெப்ரவரி 2019 தொடர்கின்றது

பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான வன்முறையை அடையாளப்படுத்துவதற்கு மற்றும் தடுப்பதற்கு ஆதாரம் சார் கொள்கைகளை உருவாக்குவதற்கு பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான வன்முறையின் பரந்த விடயங்கள் தொடர்பான தரவுகளை சேகரிப்பதற்கு, சனத்தொகை மற்றும் புள்ளிவிபரங்கள் திணைக்களத்துடன் பங்காளித்துவம்.



ஜனவரி 2019

மன்னார் மற்றும் ஹம்பாந்தோட்டைக்கு சுகாதார, சமூக மற்றும் பொலிஸ் மற்றும் நீதித் துறைகளுக்கான பிரதிபலிப்பு சேவைகள் பட்டியலிடப்பட்டன.



ஒக்டோபர் தொடர்கின்றது

தற்போதுள்ள சேவைகளுக்கு இடையில் இடைவெளிகள் மற்றும் வலுப்படுத்தல் ஒருங்கிணைத்தலை அடையாளப்படுத்துவதற்கு மன்னார் மற்றும் ஹம்பாந்தோட்டையில் மாவட்ட மட்ட ஆலோசனைகள் ஆரம்பித்தன. வன்முறையை எதிர்கொள்ளும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான சுகாதார, சமூக மற்றும் பொலிஸ் மற்றும் நீதித் துறைகளுக்கான பிரதிபலிப்பு சேவைகளை இணைப்பதற்கான பரீட்சார்த்த முயற்சிக்கு இந்த ஆலோசனைகள் வழிவகுத்தன.



ஆகஸ்ட் - தொடர்கின்றது

பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறையை அடையாளப்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் தாக்கத்தை மேம்படுத்துவதற்கு மகளிர் மற்றும் சிறுவர் விவகாரங்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சிற்கு கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டாய்வு ஆதரவு வழங்கப்பட்டது.



UNFPA பிரதிநிதி,
திருமதி. ரிட்சு நக்கேன்

பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான வன்முறை பரந்தளவிலானதாகவும், கட்டமைப்பு சார்ந்ததாகவும், கலாசார ரீதியில் வேரூன்றியதாகவும் உள்ளது. பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான வன்முறையை ஒழிக்கப் பாடுபடும் முன்னணி ஐ.நா நிறுவனம் என்ற வகையில், இந்த தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காண பல பங்குதாரர்களை ஒருங்கிணைத்து வினைத்திறன் மிக்க, ஒன்றிணைந்த அணுகுமுறை ஒன்றை UNFPA எடுக்கின்றது.

எங்கள் பணியில் நாம் பாதிக்கப்பட்டவர்கள், மீண்டு வந்தவர்களை அவர்களின் தனித்துவமான தேவைகள் மற்றும் அவர்களின் உரிமைகள், சுயகௌரவத்தை அடையாளம் காண்பதன் மூலம் எங்கள் ஆதரவு வளையத்தின் மையத்தில் கொண்டுவருகிறோம். அவர்கள் மேலும் பாதிக்கப்படவோ, தனிமையாக உணரவோ முடியாமல் இதில் நாங்கள் ஒருங்கிணைந்து ஒழுங்கமைப்பாக பணியாற்றுவது மிக முக்கியமானது.



கனடிய
உயர்ஸ்தானிகர்
டேவிட் மெக்கினன்
அவர்களின் செய்தி

மாற்றம், அபிவிருத்தி மற்றும் சமாதானத்துக்கான முக்கியமான கருவிகள் பெண்களேயாவர்.பெண்கள் வலுப்படுத்தப்பட்டு பொருளாதார ரீதியில் தங்கள் முழுமையான ஆற்றலை பயன்படுத்தும் போது நாடுகளின் பொருளாதாரம் மேம்படுகிறது என கனடா நம்புகிறது. பெண்களுக்கெதிரான வன்முறைகள் பொருளாதார வளர்ச்சி, நிலைபேறான அபிவிருத்தியை பாதிக்கிறது. ஆதாரம் சார் கொள்கைகள், சட்டங்கள், ஒழுங்குகள் மற்றும் பால்நிலை அடிப்படையான பொதுச்சேவைகள் ஆகியன இப்பிரச்சனையை தீர்க்க தேவைப்படுகின்றன. கனடா, UNFPA, பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, மற்றும் பிற பங்காளர்களுடன் ”இலங்கையில் பொது நிறுவனங்களூடாக பால்நிலை அடிப்படையிலான வன்முறையை தீர்க்கும் முயற்சியில்” இணைந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகிறது.